**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP 80/2023**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை

எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | K. குமார் | த/பெ.: | கலியபெருமாள் |
| கிராமம்: | செருமாத்தநல்லூர் | தாலுக்கா: | பாபநாசம் |
| மதம்: | இந்து | தொழில்: | அரசு பேருந்து ஓட்டுநர் |
| வயது: | 52 | முகவரி: | செருமாத்தநல்லூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.03.2025.

<u>முதல் விசாரணை:_</u>

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 15.04.2021 | நாகப்பட்டினம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் MCOP No.82/2019 இந்த விபத்து வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பானை | கணிணி நகல் |

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

மனுதாரர் பயணம் செய்த அரசு பேருந்தை நான் தான் ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். நான் அரசு பேருந்தை எங்கிருந்து எங்கு ஓட்டி வந்தேன் என்றால் சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு ஓட்டி வந்தேன். விபத்து எந்த நேரத்தில் நடந்தது என்றால் அதிகாலை 04.45 மணிக்கு நடந்தது. விபத்து நடந்தபோது லாரி நடுரோட்டில் நின்றது. விபத்து நடந்தபோது எச்சரிக்கை லைட் எரிந்திருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் சரிதான். லாரி சாலையை விட்டு ஓரமாக நின்றிருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு லாரிதான் காரணம் என்றால் சரிதான்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.